## ஆசிரியர் பேசுகிறார்

**Editor :**
Rajalingam Subashini
**Contact :**
074 1 684 643
011 5 200 900
011 5 886 187
**Address :**
Junior Thamilan,
Liberty Publishers (Pvt) Ltd.,
No 91, Wijerama Mawatha,
Colombo-07.
**E-mail :**
juniorthamilan@gmail.com
/Juniorthamilan

# ஜூனியர் தமிழனுக்கு எழுதுங்கள்...!

### அன்பின் தம்பி தங்கையரே,

இந்த வாரம் முதல் 'ஜூனியர் தமிழன்' தனி சஞ்சிகையாக வெளிவருகிறது. இது உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் விடயம் தானே? ஜூனியர் தமிழனில் இதுவரைகாலமும் வெளிவந்த விடயங்களைவிட, இனி அதிகமான பல விடயங்களை இணைத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இதன்மூலம் கிட்டியுள்ளது.

உங்கள் அறிவை பரந்தளவில் வளர்த்துக் கொள்ளும் வகையில் பல்வேறு அம்சங்களையும் இனிவரும் இதழ்களில் நீங்கள் வாசித்து மகிழலாம்.

நான் எப்போதும் சொல்வதுபோல், வாசிப்பு ஒன்றே மனிதனை பூரணப்படுத்தும் சக்தியாகும். ஆகவே, எதிர்காலம் சிறக்க வாசிப்பின் ஆசையை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொள்ளவேண்டும். இதற்கு உதவும் வகையில், ஜூனியர் தமிழனில் வாசிப்பை மேப்படுத்தக்கூடிய வகையிலான பல அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அறிவியல், விளையாட்டு, செய்திகள் மற்றும் இன்னும் பல புதிய அம்சங்கள் இணைக்கப் பட்டுள்ளதோடு, இதற்கு முன்னர் வெளிவந்த தொடர் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

கதை வாசிப்பது என்றால் அனைவருக்கும் மிக அலாதி விருப்பம்தான். அதிலும் திகில் தொடர் என்றால் சொல்லவும் வேண்டுமா? கதை பிரியர்களுக்காக புதிய திகில் தொடரும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்முறை வெளியாகியுள்ள அறிவியல் பக்கத்தில் தரப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் அதற்குரிய வீடியோ காட்சிகளை நீங்கள் கண்டு மகிழலாம். சென்ற இதழிலும்கூட, 'டிஸ்னி லேண்ட்' பற்றிய கட்டுரைப் பக்கத்தில் QR குறியீடு இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்ல, நீங்கள் உங்கள் கல்வி அறிவை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் உங்களுக்கான பாடசாலை கல்விப் போதனைகளும் வெளிவருகின்றன. இலங்கையின் பிரபல ஆசிரியப் பெருமக்கள் இவற்றை நமக்குத் தயாரித்துத் தருகின்றார்கள். குறிப்பாக, தரம் 05 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் மற்றும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான வினாத்தாள்களும் வெளிவருகின்றன. இவ்வினாத்தாள்களுக்கான விடைகளை நீங்கள் எதிர்வரும் வாரங்களில் பார்க்கலாம்.

பல திறமைமிக்க ஆசிரியர்கள் உங்கள் எதிர்கால நலனை கருத்திற்கொண்டு இவற்றை அர்ப்பணிப்பான முறையில் தயார்செய்து எமக்கு தந்துதவுகின்றார்கள்.

மேலும், ஜூனியர் தமிழனின் வழிகாட்டிகளாக இலங்கையின் பிரபல பாடசாலைகளின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் செயற்படுவதோடு, சிறந்த நல் ஆலோசனைகளையும் நமக்கு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

எல்லா தர்மங்களிலும் சிறந்த தர்மம், ஞானத்தை – அதாவது கல்வியை வழங்குவதுதான் என்று சாஸ்திரங்களும் கூறுகின்றன. அந்தவகையில் நீங்கள் உங்கள் கல்வியில் முன்னேற்றம் அடையும் வகையில் உங்களுக்கான பாடங்களை அர்ப்பணிப்போடு செய்து தரும் ஆசிரியர்களுக்கு நமது நன்றியை தெரிவித்துக்கொள்வோம்.

'ஜூனியர் தமிழன்' அதிக பக்கங்களுடன் வெளிவருவதால் மாணவ செல்வங்களான நீங்களும் உங்கள் அறிவை விருத்திசெய்து கொள்ளும் வகையில் இயன்றவரை உங்களால் முடிந்த ஆக்கங்களை உருவாக்கி எமக்கு அனுப்புங்கள். கல்வியோடு பரந்த அறிவும் இருந்தால்தான் அது உங்கள் வாழ்க்கைக்கு பயனுடையதாக இருக்கும். பரந்த அறிவைப் பெறுவதற்கு உறுதுணையாக இருப்பது வாசிப்புப் பழக்கமே. வாசிப்புப் பழக்கத்தை நமது 'ஜூனியர் தமிழன்' போன்ற பத்திரிகைகளை வாசித்து வளர்த்துக் கொள்ளுங்கள்.

சரி வாசிப்பது மட்டும்தான் முக்கியமா என்றால் நிச்சயம் இல்லை. நிறைய எழுதவும் உங்களை பழக்கப்படுத்த வேண்டும். உங்கள் எண்ணங்கள், ஆக்கங்கள், செய்திகள், விருப்பங்கள் என எதுவாக இருந்தாலும் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

அதுமட்டுமல்ல, ஜூனியர் தமிழனை வாசிப்பதோடு மட்டும் இருந்துவிடாமல் அதுபற்றிய உங்கள் கருத்துகளை விமர்சனப் பார்வையில் இரத்தினச் சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை ஜூனியர் தமிழனை மேலும் மேலும் சிறப்பாக வெளியிடுவதற்கு துணை புரியும்.

**சுபா அக்கா!**